# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2014/2015 (டிசம்பர் 2017)

## TLS 3243 தெரிவு செய்யப்பட்ட பாட நூல்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. (அ) உற்பத்தி உறவுகளுக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுக.
(08 புள்ளிகள்)

(ஆ) தமிழ் இலக்கண அமைப்பில் திணை, பால், எண், இடம் ஆகியன மக்களிடையே நிலவிய உறவுகளை எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பதை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
(17 புள்ளிகள்)

2. (அ) ஒப்பியல் ஆராய்ச்சி என்றால் என்ன? அதன் விஞ்ஞானப் பண்புகளை அடையாளம் காண்க.
(05 புள்ளிகள்)

(ஆ) "சங்ககால இலக்கியங்கள் வாய்மொழி மரபினவே" என்று க. கைலாசபதி நிறுவுவதற்கு ஒப்பியல் ஆராய்ச்சி அணுகுமுறை பயன்பட்டிருக்குமாற்றை உதாரணங்களுடன் விளக்குக.
(20 புள்ளிகள்)

3. "பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்" என்ற கவிதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு 1960 – 1980 கள் வரையான ஈழத்து நவீன கவிதையின் பண்புகளை விளக்குக.
(25 புள்ளிகள்)

4. தமிழ்மொழியில் இயற்றப்பட்ட பௌத்த காவியங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் ஆசிரியர், காலம், கதை ஆகியவை பற்றி மயிலை சீனி. வேங்கடசாமி முன்வைக்கும் கருத்துக்களை மதிப்பிடுக.
(25 புள்ளிகள்)

5. பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை "இதோபதேச கீதரசமஞ்சரி" என்ற பாடலில் தனிமனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் எனக் குறிப்பிடுபவை யாவை? விளக்குக.
(25 புள்ளிகள்)

6. "மண்ணும் சொல்லும் மூன்றாம் உலகக் கவிதைகள்" என்ற கவிதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு மூன்றாம் உலகக் கவிதைப் பண்புகளை விளக்குக.
(25 புள்ளிகள்)